**செய்தி வெளியீடு எண்: 569** **நாள்:06.08.2020**

**<u>இன்று (6.8.2020), மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K.பழனிசாமி அவர்கள் தலைமையில் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில், மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் மற்றும் கொரோனா நோய்த் தடுப்புப் பணிகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆற்றிய உரை:</u>**

அனைவருக்கும் வணக்கம்.

திண்டுக்கல் மாவட்டத்தைப் பொறுத்தவரை, கொரோனா வைரஸ் நோய்ப் பரவலைத் தடுப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் தமிழ்நாடு அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன. உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, ICMR மற்றும் மருத்துவ நிபுணர்கள் அளிக்கின்ற ஆலோசனைகளின் அடிப்படையில் நடவடிக்கைகள் எடுத்ததன் காணமாக, திண்டுக்கல் மாவட்டத்தில் படிப்படியாக கொரோனா வைரஸ் பரவுவது குறையத் தொடங்கியிருக்கிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் ஒரு பரிசோதனை நிலையம் இருக்கின்றது. திண்டுக்கல் மாவட்டத்தில் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை **43,578**, கொரோனா நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை **3,202**, குணமடைந்து வீடு திரும்பியவர்களின் எண்ணிக்கை **2,603**, இறந்தவர்களின் எண்ணிக்கை **59.** சிகிச்சையில் உள்ளவர்களின் எண்ணிக்கை **540.** நேற்றையதினம் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை **71**, குணமடைந்து வீடு திரும்பியவர்களின் எண்ணிக்கை **22**, இறந்தவர்களின் எண்ணிக்கை **2.** நேற்றையதினம் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டவர்களின் எண்ணிக்கை **1,021.** திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா நோய்த் தொற்று படிப்படியாக குறையத் தொடங்கியிருக்கிறது. இந்த சிறப்பான பணியை மேற்கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், மருத்துவர்களுக்கும், செவிலியர்களுக்கும், மருத்துவப் பணியாளர்களுக்கும் மற்றும் இந்த நோய்த் தடுப்புப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டுள்ள உள்ளாட்சித் துறை, காவல் துறை, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை போன்ற துறைகளைச் சேர்ந்த பணியாளர்கள் மற்றும் இந்த நோய்த் தடுப்புப் பணிக்கு பேருதவியாக செயல்பட்டு வரும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அலுவலர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இது ஒரு புதிய நோய். உலகத்தில் சுமார் **210** நாடுகள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டு, கடுமையான பொருளாதார இழப்பை சந்தித்துள்ளது. இந்தியாவில் தமிழகத்திலும் இந்த கண்ணுக்குத் தெரியாத கொரோனா வைரஸ் பரவியுள்ளதை கட்டுப்படுத்துவதற்கு அரசு தொடர்ந்து பல்வேறு சிறப்பு நடவடிக்கைகளை எடுத்து

வருகிறது. இது எளிதாக ஒருவரிடமிருந்து மற்றவருக்கு பரவக் கூடிய தொற்று நோய் என்று மருத்துவ நிபுணர்கள் தெரிவிக்கின்றார்கள். இதனைக் குணப்படுத்துவதற்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. இருந்தாலும், உலக சுகாதார அமைப்பு, மத்திய சுகாதாரத் துறை, ICMR மற்றும் நம்முடைய மருத்துவ நிபுணர்கள் அளிக்கின்ற ஆலோசனைகளின்படி நம்முடைய மருத்துவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய சிகிச்சை அளித்து, அதனால் குணமடைந்து வீடு திரும்புபவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதை பார்க்கிறோம்.

அதேபோல, இந்த நோயினால் பாதிக்கப்பட்டு இறப்பவர்களின் சதவீதம் குறைந்திருக்கிறது. குணமடைந்தவர்களின் சதவீதம் அதிகரித்துக் கொண்டிருக்கிறது. முழுக்க, முழுக்க பொதுமக்களுடைய ஒத்துழைப்பினால் தான் இந்த நோய்ப் பரவலை கட்டுப்படுத்த முடியும். அரசு அறிவிக்கின்ற வழிமுறைகளை முழுமையாக பொதுமக்கள் கடைபிடித்தால் இந்த நோய்ப் பரவலை படிப்படியாக குறைக்க முடியும், இயல்பு நிலைக்கு திரும்ப முடியும். இந்த நோய்த் தொற்றின் அறிகுறி தென்பட்டால், உடனடியாக மருத்துவமனைக்குச் சென்று தங்களை பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டால், விரைவில் குணமடைந்து வீடு திரும்பலாம். இதற்கு போதிய மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் போன்றவர்கள் புதிதாக அதிக அளவில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட அனைவரையும் குணமடையச் செய்வதற்கான மருத்துவ வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு உயிரும் அரசுக்கு மிக முக்கியம், மக்களைக் காப்பதுதான் அரசின் கடமை. அந்த அடிப்படையில்தான் மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள் இரவு, பகல் பாராமல் தங்களை இப்பணியில் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு, அரசுக்கு ஒத்துழைப்பு நல்கி, பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய சிகிச்சை அளித்து குணமடையச் செய்து கொண்டிருக்கிறார்கள். நான் மீண்டும், மீண்டும் பொதுமக்களைக் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், அரசு அறிவிக்கும் வழிமுறைகளை நீங்கள் முழுமையாகக் கடைபிடிக்க வேண்டும். இந்த நோய்த் தொற்று ஏற்பட்டால் இறக்கக்கூடிய சூழ்நிலைகூட நேரிடலாம். மேலும், இதற்கு மருந்து கண்டுபிடிக்காத காரணத்தால், மருந்தின் மூலம் குணப்படுத்த முடியாத

சூழ்நிலையால் ஒவ்வொருவரும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். வெளியில் செல்லும்போது கண்டிப்பாக முகக்கவசம் அணிய வேண்டும், சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும், வெளியில் சென்று வீடு திரும்பும்பொழுது கை, கால்களை நன்றாக சோப்பு போட்டு சுத்தமாகக் கழுவ வேண்டும். வீட்டையும், வீட்டிலுள்ள கழிப்பறைகளையும் சுத்தமாக வைத்துக் கொள்ளவேண்டும். தெருக்களில் உள்ள பொதுக் கழிப்பறைகளை அடிக்கடி கிருமிநாசினி தெளித்து சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். தெருக்களையும் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். இவற்றை கடைபிடித்தால் நோய்ப் பரவலைத் தடுத்து, மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்ப முடியும்.

தமிழகத்தில் இந்த நோய்ப் பரவல் ஏற்பட்டவுடன், மக்களின் வாழ்வாதாரம் பாதிக்காத வகையில், அரிசி பெறுகின்ற ஒவ்வொரு குடும்ப அட்டைக்கும் தலா 1000 ரூபாய் வழங்கப்பட்டது. விலையில்லா அரிசி, சர்க்கரை, எண்ணெய், பருப்பு ஆகியவை தொடர்ந்து மூன்று மாத காலம் வழங்கப்பட்டன. இப்பொழுது மத்திய அரசோடு மாநில அரசு இணைந்து தொடர்ந்து நவம்பர் மாதம் வரை விலையில்லா அரிசி கூடுதலாக வழங்கப்பட்டு வருகின்றது. அமைப்புசாரா தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று அரசின் கவனத்திற்கு வந்தவுடன் அவர்களுக்கும் விலையில்லா அரிசி, எண்ணெய், பருப்பு மற்றும் உதவித் தொகை வழங்கப்பட்டன. தமிழ்நாட்டில் தங்கி பணிபுரிந்து வந்த வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு விலையில்லா அரிசி, எண்ணெய், பருப்பு வழங்கப்பட்டன. மேலும் அவர்கள் சொந்த மாநிலத்திற்கு செல்ல வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தவுடன், அரசே அதன்முழு செலவையும் ஏற்றுக் கொண்டு ரயில் மூலம் அவர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். தமிழகத்தில் எந்த விதத்திலும் மக்கள் பாதிக்கக்கூடாது என்று அரசு கவனமாக நடவடிக்கை எடுத்து வருகிறது. அதுமட்டுமல்லாமல், அம்மா உணவகத்தில் விலையில்லாமல் உணவு வழங்கப்பட்டு வந்தது. சமூகக் கிச்சன் மூலமாக கர்ப்பிணிப் பெண்கள், வயது முதிர்ந்தோர், மாற்றுத்திறனாளிகள் ஆகியோருக்கு, அவர்கள் வசிக்கின்ற பகுதிகளிலே அரசின் சார்பாக உணவு வழங்கப்பட்டது. பள்ளி மாணவர்களுக்கு ஏற்கனவே மதிய உணவு வழங்கப்பட்டு வந்தது, அதற்குப் பதிலாக அவர்களுக்கு உணவுப் பொருட்கள் வழங்குவதற்கும் அரசு உத்தரவு வழங்கியிருக்கிறது.

கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டவுடன், தமிழக அரசு பல்வேறு நடவடிக்கைகளை துரிதமாக எடுத்ததன் மூலம் மக்கள் பாதிப்பிலிருந்து மீட்கப்பட்டுள்ளனர். இதற்குத் தேவையான நிதி உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது, நிதி பற்றாக்குறை என்ற பேச்சுக்கே இடமில்லை. அதேபோல, மருத்துவர்களுக்குத் தேவையான உபகரணங்களான N-95 Mask, PPE Kits மற்றும் பல்வேறு மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன, போதிய கையிருப்பும் உள்ளது. மருத்துவப் பரிசோதனைகளும் படிப்படியாக அதிகரிக்கப்பட்டு வருகின்றன. நம் மாநிலத்தில் தான் அதிக அளவு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. RTPCR Kits தான் நாம் அதிகமாக பயன்படுத்தி வருகிறோம்.

விவசாயிகள் விளைவித்த விளைபொருட்களை மார்க்கெட்டுக்கு எடுத்துச் செல்ல எவ்விதத் தடையும் இல்லாமல் வேளாண் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. கடந்த ஆண்டு சரியான முறையில் பருவமழை பெய்த காரணத்தால், நல்ல விளைச்சலை நாம் கண்டிருக்கிறோம். அதேபோல, கடந்த ஆண்டு அமெரிக்கன் படைப்புழுவால் மக்காச்சோளப் பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. இந்த ஆண்டும் அமெரிக்கன் படைப்புழுவை அகற்றுவதற்காக மருந்து தெளிப்பதற்காகும் முழுச் செலவையும் அரசாங்கமே ஏற்றுக் கொண்டிருக்கிறது. மேலும், திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு மாண்புமிகு அம்மாவின் அரசால் வறட்சி நிவாரணமும் வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு வட்டியில்லாமல் பயிர்க்கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதெல்லாம் வேளாண் பெருமக்களுக்கு தமிழ்நாடு அரசு செய்த நன்மைகள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்குத் தேவையான காய்கறிகளை விற்பனை செய்வதற்கும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் இஸ்ரேல் கூட்டுத் திட்டத்தின் மூலமாக **10.18** கோடி ரூபாய் செலவில் காய்கறி மையம் துவங்கியிருக்கின்றோம். இதில் **4,028** விவசாயிகளுக்கு நாற்றங்கால் விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. **36,000** விவசாயிகள் தொழில்நுட்பப் பயிற்சி பெற்றுள்ளனர். காய்கறி மற்றும் பழ விவசாயிகள் விநியோக தொடர் மேலாண்மைத் திட்டத்தின்

5 முதன்மை பதப்படுத்தும் நிலையங்கள் 46.34 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருக்கிறது. நுண்ணுயிர் பாசனத் திட்டத்திற்கு கடந்த நான்கு ஆண்டுகளில் 71.28 கோடி ரூபாயிலும், நடப்பாண்டில் 67 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலமாக 46,951 விவசாயிகளுக்கு சுமார் 45 கோடி ரூபாய் இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளது. நீடித்த மானாவரி விவசாயத்திற்கு 29 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு சுமார் 42,000 விவசாயிகள் பயன்பெற்றிருக்கின்றனர். இந்தத் திட்டத்திற்கு நடப்பாண்டில் சுமார் 12 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. கூட்டுப்பண்ணையம் திட்டத்தின் மூலமாக 231 உழவர் உற்பத்தியாளர் குழுக்களுக்கு 11.50 கோடி ரூபாய் வழங்கப்பட்டு, 1,056 பண்ணை இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு, சுமார் 24,000 விவசாயிகள் பயனடைந்துள்ளனர். இந்த ஆண்டு, இத்திட்டத்தின் மூலம் 7,700 விவசாயிகள் பயனடையவுள்ளனர். 42 வெங்காய சேமிப்புக் கிடங்குகள், 124 சிப்பம் கட்டும் அறைகள், 5000 டன் குளிர்பதனக் கிடங்கு ஒன்று அமைப்பதற்கு விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளாட்சித் துறை, பொதுப்பணித் துறையின் சார்பாக திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் 533 பண்ணைக் குட்டைகள், 403 தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளன. வேடசந்தூர், தங்கம்மாபட்டி கிராமத்தில் 10 ஏக்கர் பரப்பளவில் உணவுப் பூங்கா அமைக்கப்படவுள்ளது. இப்படி பல திட்டங்கள் மாண்புமிகு அம்மாவின் அரசால் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழகத்தில் புகழ்பெற்ற ஆலயங்களில் ஒன்றாக திகழ்வது திண்டுக்கல் மாவட்டத்தில், பழனியில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் ஆலயம் ஆகும். இந்தியா மட்டுமல்ல, உலக அளவிலேயே பூட்டு என்று சொன்னால் திண்டுக்கல் தான் ஞாபகத்திற்கு வரும். 123 நிறுவனங்கள் பூட்டு தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். 41 நூற்பாலைகள் அமைந்திருக்கின்றன. அதிக அளவில் நூற்பாலைகள் இங்கு இருக்கின்ற காரணத்தால், அதிகமான நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கின்ற பகுதியாகவும் இப்பகுதி திகழ்கின்றது.

இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் 2015–ஆம் ஆண்டு சென்னையில் உலக முதலீட்டாளர் மாநாட்டினை நடத்தி, புதிய திட்டங்களை கொண்டு வந்த காரணத்தால், இந்த மாவட்டத்தில், நிலக்கோட்டை, சிப்காட் தொழிற்பூங்காவில், அமெரிக்காவைச் சேர்ந்த ஆம்வே நிறுவனம் ரூபாய் 250 கோடி முதலீட்டில் 400 நபர்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கும் வகையில் மருந்து மற்றும் ஊட்டச்சத்துப் பொருட்கள் உற்பத்தி விரிவாக்கத் திட்டத்தினை நிறுவியுள்ளது. சுதர்சன் ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் ரூபாய் 284 கோடி முதலீட்டில் சுமார் 400 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் திண்டுக்கல் கோட்டையூர், அகரம் பகுதியில் பருத்தி நூல் மற்றும் ஆடைகள் உற்பத்தி ஆலையை நிறுவியுள்ளது. அதேபோல, சித்தி விநாயகர் ஸ்பின்னிங் மில்ஸ் நிறுவனம் ரூபாய் 52 கோடி முதலீட்டில் சுமார் 325 நபர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கின்ற விதத்தில் திண்டுக்கல், வேடசந்தூர் பகுதியில் பருத்தி நூல் மற்றும் ஆடைகள் உற்பத்தித் ஆலையை நிறுவியுள்ளது.

2019–ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர் மாநாட்டிற்குப் பின், அணில் சேமியா, அம்பிகா காட்டன் மில்ஸ் மற்றும் சுவாதி ஹேட்ச்சரீஸ் என மூன்று நிறுவனங்கள் சுமார் 300 கோடி மதிப்பீட்டில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திட்டப்பட்டுள்ளன. இதன்மூலம், சுமார் 300 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும்.

சிப்காட்டில், ரூபாய் 1,000 கோடி முதலீட்டில் 63 நிறுவனங்கள் நிறுவப்படவுள்ளன. இதன்மூலம் சுமார் 3,000 நபர்கள் நேரடியாக வேலைவாய்ப்புப் பெற உள்ளனர். இதுவரை, 31 தொழில் நிறுவனங்களுக்கு ரூபாய் 5.25 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 4,733 குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு சுமார் ரூபாய் 106 கோடி கடன் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. கோவிட் நிவாரணம் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் 35 நிறுவனங்களுக்கு சுமார் ரூபாய் 2.70 கோடி மதிப்பிற்கு கடன் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

1997–ஆம் ஆண்டு முதல் 61 தோல் பதனிடும் தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. இதற்காக, ரூபாய் 35.70 கோடி மதிப்பீட்டில் பொது சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருகிறது. மாண்புமிகு அம்மாவின் அரசு, தொழில் மற்றும் வேளாண்மைக்கு

முன்னுரிமை வழங்கி இரு தொழில்களையும் இரண்டு கண்களைப் போலப் பாதுகாத்து, வேளாண் தொழில் சிறக்கவும், படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்க புதிய தொழில் தொடங்குவதற்கான நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது.

அதேபோல, பல்வேறு கூட்டுக் குடிநீர் திட்டங்களை உருவாக்கி, நிலையான குடிநீர் வசதியை இந்த மாவட்டத்திற்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றோம். பல்வேறு சாலைகள் சீரமைக்கப்பட்டுள்ளதோடு, புதிய சாலைகளும் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. பருவ காலங்களில் பொழிகின்ற மழைநீர் ஒரு சொட்டுகூட வீணாகாமல் சேமித்து வைத்து, விவசாயத்திற்கும், குடிப்பதற்கும் தேவையான நீர் கிடைக்க குடிமராமத்துத் திட்டம் மூலம் பல்வேறு பணிகள் இந்த மாவட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஓடைகள், நதிகளின் குறுக்கே பல தடுப்பணைகள் கட்டுவதற்கு அம்மாவின் அரசால் அறிவிக்கப்பட்டு, இந்த மாவட்டத்தில் பல்வேறு தடுப்பணைகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் பல தடுப்பணைகள் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

கொடைக்கானலில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டப்பட்டுள்ளது. பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையான பெரியகுளம், கேரளா பகுதியிலிருந்து கொடைக்கானலுக்கு குறைந்த தூரத்தில், குறுகிய காலத்தில் சென்றடைவதற்கு கும்பக்கரை முதல் அடுக்கம் வரையிலான சாலை அமைக்கும் பணியையும் அம்மாவின் அரசுதான் ஏற்பாடு செய்துள்ளது.

குஜிலியம்பாறையில் புது வருவாய் வட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. முதியோர் உதவித் தொகை, உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனங்கள் வழங்கியுள்ளோம். முதலமைச்சரின் சிறப்புக் குறை தீர்க்கும் திட்டத்தை நான் சட்டமன்றத்தில் அறிவித்து, அதை நடைமுறைப்படுத்தும் விதமாக, திண்டுக்கல் மாவட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மனுக்கள் பெறப்பட்டு, தீர்வு காணப்பட்டு, புதிய பட்டாக்கள், முதியோர் உதவித் தொகைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு அம்மாவின் அரசு இந்தச் சோதனையான நேரத்திலும், கொரோனா வைரஸ் நோய்ப் பரவல் தடுப்புப் பணிகளை சிறப்பாக திண்டுக்கல் மாவட்டத்தில் மேற்கொண்டுள்ளது. மாண்புமிகு அம்மாவின் அரசு அறிவித்த அனைத்துத்

திட்டங்களும், இந்த மாவட்டத்தில் சிறப்பான முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளன. எனவே, சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கும், அவரோடு இணைந்து பணியாற்றிய அனைத்து அரசு அலுவலர்களுக்கும், நோய்ப் பரவல் தடுப்புப் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள், மருத்துவப் பணியாளர்கள், தூய்மைப் பணியாளர்கள், பிற துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி, வணக்கம்.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**